1986 நவம்பர் 25]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டனத் தீர்மானம் கொடுத்துவிட்டு, விதியின்படி அதை நீங்கள் நிராகரித்தால், அதை எடுத்துத்தான் ஆக வேண்டும் என்று பிடிவாதம் செய்வது எந்த முறையில் நியாயம்? அது எந்த ஜனநாயக முறையிலே என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்து கவன ஈர்ப்பு. (கூச்சல்-குழப்பம்).

4. கவன ஈர்ப்பு.

(அ) திட்டக்குடி வட்டம், வைத்தியநாதபுரத்தில் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திட்டக்குடி வட்டத்திலுள்ள வைத்தியநாதபுரம் கிராமத்தில் 1986 ஆம் வருடம் அக்டோபர்—நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தைக் குறித்தும் இம்மாதிரி திடீர் வெள்ளத்தை கிராமப்புறங்களில் தடுப்பதைக் குறித்துமான'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சரின் சார்பாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள திட்டக்குடி வட்டத்தில் 31-10-1986 அன்று 190 மி.மீ. மழை பெய்தது. இப்பெரு மழையின் காரணமாக திட்டக்குடி வட்டத்திலுள்ள கீழ்க்கண்ட ஏழு கிராமங்கள் பாதிக்கப்பட்டன:—

1. வெங்கனூர்.
2. வைத்தியநாதபுரம்.
3. டி. ஏந்தல்.
4. தொழுதூர்.
5. தச்சூர்.
6. நங்கூர்.
7. பெண்ணாடம்.

வைத்தியநாதபுரம் கிராமத்திலோ மற்ற கிராமத்திலோ மேற்கூறிய பெருமழையினாலும் அதற்கு பிறகு பெய்த மழையினாலும் திடீர் வெள்ளம் ஏற்படவில்லை. மேற்கூறிய ஏழு கிராமத்தில் 35 குடிசைகள் முழுமையாகவும், 37 குடிசைகள் பகுதியாகவும் பெருமழையினால் பாதிக்கப்பட்டன. வைத்திய நாதபுரம் கிராமத்தில் மட்டும் 4 குடிசைகள் முழுமையாகவும் 11 குடிசைகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டன. இந்த வட்டத்தில் பயிர்ச் சேதம் எதுவும் இல்லை. பாதிக்கப்பட்ட 72 குடிசைகளுக்கும் குடிசை மானியங்கள் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் அரிசி, மண்ணெண்ணெய் மற்றும் வேட்டி/சேலை வழங்கப்பட்டன. திட்டக்குடி வட்டத்தில் ஒரு மாடும் நான்கு ஆடுகளும் மடிந்தன.

கீழ்க்கண்ட நீர்ப்பாசன நிலைகள் பாதிக்கப்பட்டு அவைகள் ரூ. 17,000 செலவு செய்து உடன் சரி செய்யப்பட்டுள்ளன:—

1. பேலன்துறை பிரதான கால்வாய்—15 மீட்டர் உடைப்பு.

2. தொழுதூர் குளம் — 25 மீட்டர் உடைப்பு.

3. வெல்லிங்டன் நீர்த்தேக்கம் அருகில் உடைப்பு.

4. எம். பரூர் மண் கரை — 6 மீட்டர் உடைப்பு.

5. விருத்தாச்சலம் அணைக்கட்டு அருகில் உடைப்பு.

சாலைகள் உடைப்பு:

1. வெங்கனூர் கிராமத்தின் அருகில் வெப்பூர் — தொழுதூர் தேசிய நெடுஞ்சாலையில் 200 அடி மண் அரிப்பு ஏற்பட்டது. இதனை உடனே சரி செய்து போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது.

2. தொழுதூர் — வடக்குரம்பூண்டி சாலையில் உடைப்பு ஏற்பட்டு உடனே சரி செய்யப்பட்டு போக்குவரத்து அனுமதிக்கப் பட்டது.

மேற்கூறிய நிவாரணங்கள் போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்டு மக்களுக்கு இன்னல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது.

பொதுப் பணித்துறை அலுவலர்களும், நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களும் பருவ மழை ஆரம்பிப்பதற்கு முன்பே நீர் நிலைகள், சாலைகள் வெள்ளம் ஏற்பட்டால் சேதம் அடையாமல் இருக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஆகவே, திடீர் வெள்ளம் பொதுவாக கிராமப்புறங்களில் ஏற்படுவது இல்லை.